I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES R.W.1
<u>M.C.O.P.NO.323/2019</u>

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Kumar |
| Designation | : | Investigator |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2025

**விசாரணை தொடங்கிய நேரம் :** 12.45 p.m

**முதல் விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ. 1 – Investigation report

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பிரதாண மனுவை படித்து பார்த்திருக்கிறேன். விபத்தில் அடிப்பட்டவர் எங்கள் காப்பீடு நிறுவனத்தை பொறுத்தவரை 3 ஆம் தரப்பினர் என்றால் சரிதான். நான் மனுதாரர் முகவரிக்கு சென்று நான் விசாரணை செய்தேன். இறந்துபோன பாலா என்பவர் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை செய்தார் என்றால் சரிதான். அவர் மாதம் எவ்வளவு சம்பளம் வாங்கினார் என்பதை நான் என்னுடைய

விசாரணை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்ததற்கு பின்னிட்ட இந்த வழக்கில் இதுவரை குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் இருக்கிறார்கள் என்றால் 2022 வரை தாக்கல் செய்யவில்லை அதன் பிறகு செய்தார்களா என்று தெரியாது. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இன்றைய தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் யார் மீது தவறு இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல முதல் தகவல் அறிக்கை படி TN 23 BL 6915 என்ற வாகனத்தின் ஓட்டுனர் மீது தான் தவறு என்று உள்ளது.

இறந்தவர் 3ஆம் தரப்பினர் என்பதாலும் காப்பீடு நிலுவையில் இருப்பதாலும் மனுதாரர்களுக்கு நாங்கள் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. யார் மீது தவறு என்று குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யாத வரை என்னால் சொல்ல இயலாது என்பது சரியல்ல. இழப்பீடு வழங்குவதை தவிர்ப்பதற்காக இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன பாலா சென்ற வாகனத்தின் ஓட்டுனர் மீது தான் அஜாக்கிரதை என்றாலும் எனவே எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

**விசாரணை முடிந்த நேரம் :** 12.55 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

(Sd/Tmt.G.Santhi)
முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.